தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

புதன்கிழமை, 1986 ஏப்ரல் 30.

சித்திரை 17, அட்சய, திருவள்ளுவராண்டு, 2017.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10-00 மணியளவில் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினா 227 மற்றும் 228 இரண்டும் ஒரே விஷயம் பற்றிய கேள்விகளாக இருப்பதால், இரண்டையும் சேர்த்து எடுத்துக் கொள்ளலாம்.

ஹெலிகாப்டர்

* 227 **வினா—டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) தமிழக அரசு வாங்கிய ஹெலிகாப்டரின் விலை எவ்வளவு?

(இ) அதற்கு, மாதந்தோறும், இதுவரை ஆகியிருக்கின்ற பராமரிப்புச் செலவு எவ்வளவு?

(உ) இதுவரை அது எத்தனை முறை பயன்படுத்தப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : (அ) விலை ரூ. 69,87,185.80 ஆகும் (ரூபாய் அறுபத்து ஒன்பது இலட்சத்து எண்பத்தேழாயிரத்து நூற்று எண்பத்து ஐந்தும் பைசா எண்பது மட்டும்).

(இ) இந்த ஹெலிகாப்டருக்கு மாதந்தோறும் இதுவரை ஆகியிருக்கின்ற பராமரிப்பு செலவு மட்டும் ரூ. 17,811 ஆகும்.

(உ) இந்த ஹெலிகாப்டர் இதுவரை 426 முறை உபயோகப்படுத்தப் பட்டுள்ளது (11-2-1986 வரை)